14.11.2017

தி இந்து

தமிழால் இணைவோம்

# வடகடலோர மாவட்டங்களில் இன்றும் கனமழை உண்டு: வானிலை ஆய்வு மையம்



குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக சென்னை, காஞ்சி, திருவள்ளூர் உள்ளிட்ட வட கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்றும் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடங்கியதை அடுத்து தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வடகடலோர மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

பெருமழை தரும் என எதிர்பார்த்த மேகக்கூட்டங்கள் கடலிலேயே மழையாக பொழிந்ததால் சென்னை கனமழையில் இருந்து தப்பியது.

இந்நிலையில் நேற்று முதல் சென்னை மற்றும் கடலோர மாவட்டங்களிலும், உட்புற மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்து வருகிறது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலச்சந்திரன் கூறியதாவது:

“நேற்று தென்மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவிய வலுவான காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று வட திசையில் நகர்ந்து தென் மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவுகிறது.

இதன் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் வடகடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை பதிவாகி உள்ளது. தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பதிவாகி உள்ளது.

அதிகபட்சமாக திருவள்ளூரில் 7 செ.மீ மழையும், ராமேசுவரம் பாம்பன் பகுதியில் 6 செ.மீ.மழையும் பதிவாகியுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் வட கடலோர மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். கன மழையை பொருத்தவரையில் காற்றழுத்த தாழ்வு பகுதியின் நகர்வை பொருத்து சென்னை, திருவள்ளூர் , காஞ்சிபுரம் உள்ளிட்ட ஓரிரு இடங்களில் கனமழை பொழிய வாய்ப்பு உள்ளது. தமிழக பகுதிகளில் மழை குறையும்”. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

காற்றழுத்த தாழ்வு வடக்கு நோக்கி நகர்கிறது சென்னையில் மழை இன்றே கடைசி: தமிழ்நாடு வெதர்மேன்



தற்போது நிலை கொண்டிருக்கும் காற்றழுத்த தாழ்வுப்பகுதி வடக்கு நோக்கி நகரத் தொடங்கிவிட்டது, எனவே இந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியில் இருந்து சென்னைக்கு மழை கிடைப்பது இன்றுதான் கடைசி. என வானிலை ஆர்வலரும் பதிவருமான தமிழ்நாடு வெதர்மேன் பிரதீப் ஜான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ஃபேஸ்புக் பக்கத்தில், "தற்போது நிலை கொண்டிருக்கும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியில் இருந்து சென்னைக்கு மழை கிடைப்பது இன்றே கடைசி. ஏனெனில், காற்றழுத்த தாழ்வுப்பகுதி வடக்கு நோக்கி நகரத் தொடங்கிவிட்டது.

குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நகர்வதன் காரணமாக, ராமநாதபுரம் பகுதியில் மழை இருந்தது. இன்று இதேசூழல் இருப்பதால், சிவகங்கை, புதுக்கோட்டை, திருவாரூர், நீலகிரி, கோவை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் மிதமான மழை இருக்கும்.

சென்னையில் இன்று இரவு முழுவதும் அவ்வப்போது மழை இடைவெளிவிட்டு பெய்யும். ஒரு சிலநேரங்களில், ஒருசில பகுதிகளில் மட்டும் கனமழையும் பெய்யக்கூடும்.

**குளிர்ச்சியான நாள்:**

இந்த ஆண்டிலேயே இன்றுதான் மிகவும் குளிர்ச்சியான நாளாக இருக்க வாய்ப்புள்ளது. தற்போது வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸ் என்றளவிலேயே இருக்கிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சென்னை, திருவள்ளூர், காஞ்சியில் கனமழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் தகவல்




வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக இரு நாட்களுக்கு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய வட கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழக கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காற்றின் வேக மாறுபாடு காரணமாக மேகக் கூட்டங்கள் நிலப் பகுதிக்கு வராமல், கடல் பகுதியிலேயே மழையாகப் பெய்துள்ளது. இந்நிலையில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தற்போது வலுப்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: கடந்த நவம்பர் 10-ம் தேதி முதல் 4 நாட்களாக வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி சற்று வலுப்பெற்று தொடர்ந்து அதே பகுதியில் நிலவி வருகிறது. இது, அடுத்து வரும் இரு நாட்களில் வட திசையில் நகர்ந்து செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்

காரணமாக செவ்வாய்க்கிழமை முதல் தமிழகத்தில் மழை படிப்படியாகக் குறைய வாய்ப்புள்ளது.

அடுத்து வரும் இரு நாட்களைப் பொருத்தவரை வட கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை, காஞ்சி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில சமயங்களில் மழை அல்லது சற்று பலத்த மழை பெய்யும்.

இதற்கிடையில், திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக எண்ணூரில் 11 செமீ மழை பதிவாகியுள்ளது. குறைந்தபட்சமாக சோழவரம், செங்குன்றம், சென்னை விமானநிலையம், காஞ்சிபுரம் மாவட்டம் தரமணி ஆகிய இடங்களில் தலா 3 செமீ, திருவள்ளூரில் 2 செமீ மழை பதிவாகியுள்ளது.